**செய்தி வெளியீடு எண்:546** **நாள்: 23.08.2017**

## <u>ஆவின் வரலாற்றில் பால் கொள்முதலில் சாதனை</u>

ஆவின் வரலாற்றில், பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி, பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து, தரமான பாலுக்கு தகுந்த விலை உரிய நேரத்தில் கொடுக்கப்பட்டு வருவதால், தற்போது **22.08.2017** அன்று அதிகபட்சமாக **31.84** இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, ஆவின் சாதனை படைத்துள்ளது. இந்த மாபெரும் சாதனை கடந்த ஆண்டில் **03.08.2016** அன்று அதிகபட்சமாக எட்டியிருந்த பால் கொள்முதல் சாதனையான **31.77** இலட்சம் லிட்டர் அளவை முறியடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. வரும் நாட்களில் மேலும் பால் கொள்முதல் அதிகரிக்கப்படும் என ஆவின் நிர்வாக இயக்குநர் திரு. சி. காமராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**